# இந்துசாதனம்.

# THE HINDU ORGAN.

சோமவாரத்திலும், குருவாரத்திலும் பிரசுரமாகும்.

"எனைத்தானு நல்லவை கேட்க வனைத்தானு, மான்ற பெருமை தரும்."

**பத்திராக் கிரயம்.**

| | | |
|---|---|---|
| யாழ்ப்பாணப் பட்டணம்: | ஆ 1-க்கு ரூ | 5-00 |
| இலங்கை, இந்தியா: | " ரூ. | 8-00 |
| தொலைவாய்ப்பகுதி: | " ரூ | 9.00 |
| தனிப்பிரதி: | | சதம் 5 |

முற்பணம் அனுப்புவோருக்கே பத்திரிகை அனுப்பப்படும்.

**விளம்பர விகிதம்.**

| | | |
|---|---|---|
| முதன்முறைக்கு:—ஒருகலம் | | ரூ. 9-00 |
| " | அரைக்கலம் | ரூ. 4-50 |
| " | கால்கலம் | ரூ. 3-00 |

அடுத்த முறைகட்கு மேற்படி விகிதங்களிற் பாதி.

விளம்பரங்கள் முற்பண மனுப்பினலன்றிக் கவனிக்கப்படா.

புத்தகம்—௪௦. } யாழ்ப்பாணம்:—விபவஞு மார்கழிமீ ௩௨, (1928 டிசெம்பர் 17) திங்கட்கிழமை. { இலக்கம்—௪அ.


உ

கணபதி துணை.

சீர்பூத்த கருவிழு லுணர்ச்சி தேங்கச்
சிவம்பூத்த நிகமாக மங்க வோங்கப்
பார்பூத்த புறச்சமய விருள்க ணீங்கப்
பரம்பூத்த சைவநிலை பாரோர் தாங்கப்
பேர்பூத்த சிவானந்தத் தினிது தூங்கப்
பிறைபூத்த சடைமவுலிப் பிரானுர்தந்த
வார்பூத்த வநிவிச்சை தொழிலென்றேறு
மதம்பூத்தவிநாயகன்றாள்வணங்கிவாழ்வாம்,

வாழ்க வந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்க்கவே.

---

## சாலாமிஸ்திரி லேகியம்.

இந்த லேகியத்தை யான் அநேக பிரபுக்களுக்குச் செய்து கொடுத்துப் பல வியாதிகளைக் குணப்படுத்தியதால் அவர்கள் மனமகிழ்ந்து வெகுமதிகளையும் கொடுத்திருக்கிறார்கள். இதை நான் விளம்பரத்தில் உலகநன்மைக்காகப் பிரசுரித்திருக்கிறேன். ஆனால் பிரபுக்கள் மாத்திரமல்ல ஏழைகளும் இதனாலுண்டாகுஞ் சுகத்தை அடையும்படி பொதுஜன நலத்தைக்கருதியே இப்போது இந்த லேகியத்தைப்பற்றிப் பிரசுரித்து வருகிறேன்.

இது சாலாமிஸ்திரி, குங்குமப்பூ, சிலாஜித், கஸ்தூரி, குமாஸ்தாகா, பீதாரு, சாலாமுஸ்லி, சப்பேமுத்ஸ்லி, பிஸ்தாஸ, சார்ப்பருப்பு, பாதம்பருப்பு, சாத்தாவாரி, சீர்முன்னிவிதை, நாகப்பூ வங்கபஸ்பம், அப்ரக்பஸ்பம், பவளப்பஸ்பம், வெள்ளிபஸ்பம், அயகாந்த செந்தூரம் சாம்பிராணிப் பதங்கம் இன்னும் அநேக புஷ்டியான மூலிகைவகைகள் சேர்த்துச் செய்யப் பெற்றிருக்கின்றது.

இதனால் நீரிழிவு, நீர்க்கடுப்பு, நீரடைப்பு, மூலச்சூடு, ஒருவருஷத்துள் உண்டாயிருக்கும் பக்கவாய்வு, இருமல், காசம் பித்தகாமாலை, பித்தபாண்டு, பீனிசம், கைகால் காந்தல் வலி, இடுப்புவலி, பக்கவாய்வு இன்னும் அநேக கடுமையான வியாதிகள் நீரும். ஸ்திரீகள் இந்த லேகியத்தைச் சாப்பிட்டுவந்தால், மேற்சொல்லிய வியாதிகள் சுகமடைவதுடன் சூதக வாய்வு, பிரசவ அறையில் உண்டாகும் நோய்கள் நீர்ந்து தேகபுஷ்டியும் பலமும் பெறுவார்கள். பால் விருத்தியாகும்.

இந்த லேகியத்தின் விலை ஒருந்தல் ஒன்றுக்கு ரூபா ௨௦. அரைறுந்தலுக்கு ரூபா ௧௦. கால் றுந்தலுக்கு ரூபா ௫. தபாற்செலவு பிரத்தியேகம்.

சிங்கப்பூர் பினங்கு முதலிய தொடுவாயிராச்சியப்பகுதிக்கு வி. பி. சட்டம் இல்லாததினால் முன்மணி ஆடர் அனுப்புதல் வேண்டும்.

இங்ஙனம்,
க. ஆறுமுகம்பிள்ளை,
சிவநூன ஆரோக்கியசுகாதாரவைத்தியசாலை
காத்தான்குடி போஸ்டு,
மட்டக்களப்பு,
இலோன்.

(M. 30.)

---

## யாழ்ப்பாணம் கீரிமலை மூர்த்திதல தீர்த்தமகிமை.

நகுலமுனிவின் கீரிமுகத்தை மாற்றியதும் திசையுக்கிரசோழன் மகள் மாருதப்பிரவல்லியின் குன்மவலியையும் குதிரைமுகத்தையும் நீக்கியதும், அர்ச்சுனன் னன் முதலிய அரசர்களும் வந்து தீர்த்தமாடிப் பெரும்பேறுபெற்றதும் யாழ்ப்பாணத்தில மூர்த்திதலம் தீர்த்தம் ஒருங்கே யமையப்பெற்றதுமான இந்தக் கீரிமலைத் தலத்திற் பழையகாலமுதல் இருந்த பிரசித்தமான ஸ்ரீமத் நாராயணமூர்த்திக்குத் திருக்கோவிலமைந்து அதிற் பிரதிட்டைசெய்து பூசைநடாத்து வருகின்றது. மேற் கூறிய விருந்து எழுந்தருளப்பட்ட முருகமூர்த்திக்கு, அதன் பக்கத்தே ஒரு திருக்கோவிலையும், அதற்கு நேர்வடக்கில் வெள்ளாறும் பன்னீர்மரமும் நிற்கின்ற மலைச்சாரலில் சிவலிங்கப்பெருமானுக்கு ஸ்ரீ காசியில் எழுந்தருளியிருக்கும் விசுவநாதசுவாமிக்கு அர்ச்சிப்பதுபோல ஆசாரசீலர்கள் தாமே அர்ச்சிக்கத்தக்கதாக ஒருதிருக்கோவிலையும் அமைத்து அவைகளிலே மேற் மூர்த்திகளைப் பிரதிட்டைசெய்யவேண்டியிருத்தலினால் அடியார்கள் இச்சிவபுண்ணியத்தில் கலந்து தங்களாலியன்ற பொருளுதவி செய்து அருள்பெறுமாறு வேண்டுகின்றேன்.

க. த வடிவேலுமேஸ்திரி,
வல்வெட்டித்துறை

(Q 113.)

---

## முதிரைமர விற்பனவு.

வவனியா றெயில்வே ஸ்ரேசனுக்கு அணித்தாகவிருக்கும் கவுண்மேத்து மாடிப்போவில் முன்னூறு (300) முதிரை மரங்கள் விற்பனவுக்கு இருக்கின்றன.

மேற்படி மரங்கள் புகையிரதத்தில் லேசாயேற்றுமதி செய்யத்தக்க விடத்தில் கிடக்கின்றன.

மரம் வாங்க விரும்புவோர் நேரில் வந்து பார்த்து எடுத்துக்கொள்ளலாம். அல்லது அடியிற்காணும் விலாசத்துக்கு எழுதி விபரம் அறிந்துகொள்ளவும்.

தி. பொன்னம்பலம்,
கடைவீதி, வவனியா.

(M. 71)

---


# யாழ்ப்பாணம் ஐக்கியலாபநிதி.

1918 ஆ ஸ்தாபிதமானது.

வங்கிக் காரர்.

மூலநிதி 8 லட்சம் ரூபா.

இதுவரையிற் கொடுபட்ட பங்குப்பணம் ரூபா 1,22,840.

100 ரூபா விகிதமான 8000 பங்குகள்.

**பங்குப்பணங் கட்டுமுறை.**

பங்கொன்று 1 ரூபா விகிதமாக 75 மாசகாலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்தகாலமுடிவில் பங்கொன்றுக்கு ரூ. 100 திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்நேரமும் வாங்கலாம்.

**தினசரிப் பற்றுவரவு.**

எச்சமிதி சராசரி 500 ரூபாவிற்குக்குறையாமல் இருக்குமானால் 3 வீதத வட்டியுடன் தினசரிப்பற்றுவரவு செய்யலாகும்.

**தவணைவரையறுக்கப்பட்ட க்ஷேமப்பணம்.**

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 12 மாசம் என்னுங் காலங்கள் வரையறுத்து ஏற்கப்படும். வட்டியும் முறையே 3 விகிதம், 4 விகிதம், 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.

**உண்டியல்கள்.**

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்கவிதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய்ராச்சியப்பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

**இக்கிலசேட்டு வட்டத்திற்கு மாற்றிக்கொடுக்கப்படும்.**

**கடன்.**

நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். மாசந்தோறும் கட்டுபவர்களுக்கு 10 விகிதமான வட்டியும் ஏனையோர்க்கு 12 விகிதமான வட்டியும் விதிக்கப்படும். (ஈடுவைத்தவர்கள்) முதலையும் பாகம்பாகமாகக் கொடுக்கலாம்.

காணி, தானியங்கள், சீலை முதலாம் பழுதுபடாத பொருள்களையும் ஈடாகவைத்துக்கொண்டு தக்க பிணையுடன் கடன் எடுக்கலாம். (இந்தக்கடனையும் பாகம் பாகமாகக் கட்டித் தீர்க்கலாகும்.)

இன்னும் வேண்டிய விபரங்களை என் மூலமாக அறிந்து கொள்ளலாம்.

மூ தாமோதரம்பிள்ளை
மனேஜர்.

(Y 65.)

## தலைநோவின் விலை என்ன?

ஒரு மணிநேரம் வரை ஒரு சமயம் வருத்தும் அல்லது ஒருநாள் முழுவதும் வாட்டும் இல்லாவிட்டால் தினசரி வந்து தொல்லைப்படுத்தும் இத்தலைநோவிலிருந்து தப்பிக்க என்னதான் கொடுக்க மாட்டீர்கள்? ஆனால் அதிகங் கொடுக்க வேண்டியதில்லை. ஒரு புட்டி

## லிட்டில்ஸ் ஓரியென்டல் பாம்.




தான் வேண்டியது. உடனே சுகத்தைத்தரும். விலையைப்பற்றி நினைக்கவே மாட்டீர்கள். அதின் வேலை அவ்வளவு திருப்தியாயிருக்கும்.

இதுதான் இந்த ஆதி தைலத்தின் பிரக்கியாதிக்குக் காரணம்.

43 வருடங்களாய்க் கை கண்டது.

எல்லா ஷாப்புகளிலுங் கிடைக்கும்

3—28. Litts Oriental Balm and Pharmaceuticals Ltd. Madra.

(Y. 61.)


---

## அடைவுநகை விற்பனவு விளம்பரம்.

1893 ஆண்டின் 8-ம் இலக்கக்கட்டளைச் சட்டத்தின்படி லைசென்ஸ் பெற்ற அடைவுபிடிக்கும் யாழ்ப்பாணம் வண் கிழக்கு செ கா. செ சாமிதஞ் செட்டியாரிடம் அடைவு வைக்கப்பட்டு இப்போது தவணைதப்பி மேற்படி சட்டத்தின் 12-ம் பிரிவின்படி பிரசித்த ஏலத்தில் விற்கவேண்டிய நகைகளின் விபரம்:—

| இல. | தி 1927ஆ | ரூபா | பேரும் நகைகளின் விபரம் |
|---|---|---|---|
| | | | ஆவணி மாசம் |
| 802 | 29 | 100 | கொட்டடி வேலாயுதர் சுப்பிரமணியம் பொன் கல் மூக்குப்பூவைத்த கொட்டைக்காப்பு சோடி 1 |
| | | | ஐப்பசி மாசம் |
| 840 | 1 | 10 | தொல்புரம் மயில்வாகனம் இரத்தினம் கல்வைத்தோடு 1 |
| | | | இலண்ட் மாசம் |
| 911 | 24 | 80 | கொழும்புத்துறை முத்து சுப்பிரமணியர் பொன் பழுது சாதா தாலிக்கொடியில் 1 இதழ் மோதிரம் 1 |
| | | | செப்டெம்பர் மாசம் |
| 945 | 20 | 70 | கொக்குவில் மேற்கு சபாபதி சோமசுந்தரம் பொன் பழுது தாலிக்கொடி 1 இதழ் மோதிரம் 1 |
| | | | அக்டோபர் மாசம் |
| 966 | 1 | 23 | சரசாலை வல்லிபுரம் இராமலிங்கம் பொன் சைக்கலி 1 |
| 989 | 10 | 30 | வண்கிழக்கு வேலுப்பிள்ளை பொன்னுத்துரை பொன் திருகாணிப்பில்லாத பீலிக்காப்பு சோடி 1 |
| 1020 | 22 | 140 | சங்குவேலி பொன்னம்பலம் குமாரகுரியர் பொன் 1திருகு கறைப்பில்லாத கொட்டைக்காப்பு சோடி 1 கல் மூக்குப்பூவைத்த கைச்சங்கிலி சோடி 1 |
| | | | டிசெம்பர் மாசம் |
| 1094 | 19 | 150 | கல்லூர் பொன்னம்பலம் சுப்பையா ஒரு கல்லில்லாத கிப்புமாலைப்பதக்கம் 1 |
| 1101 | 22 | 21 | உடுப்பிட்டி சபாபதி மயிலு பொன் கைச்சங்கிலி 1 சாதாமோதிரம் 1 |

1892 ஆண்டு டிசெம்பர்மீ 29உ க்குச் சரியான விபவஞு மார்கழிமீ 5உ சனிக்கிழமை காலை 10 மணியளவில் மேற்படி கடைத்திண்ணையில் :எடுபட்ட நகை பிறநீங்கலாக வெந்நிசில் விற்கப்படும்.

அரு. செல்லையா உடையார்,
வெந்தீஸ்மேஸ்தர்,
வண்-கிழக்கு.

Mis. 1344.

---

## திருகோணமலை மாதர் ஐக்கிய சங்கம்.

நிகழும் விபவஞு கார்த்திகைமீ 23-ந் திகதி (8—12—28) சனிக்கிழமையன்று பிற்பகல் 6 மணியளவில் ஸ்ரீ சண்முக வித்தியாலயத்தில் ஸ்ரீமதி இ. த. இராஜபுவனேஸ்வரியம்மாளின் தலைமையிற் கூட்டம் தேவார பாராயணத்தோடு ஆரம்பமாயது. காரியதரிசியின் புதல்வி ஸ்ரீமதி ப. த. காந்திமதி அம்மாளால் சென்ற கூட்டவர்த்தமானம் வாசிக்கப்பட்டபின் ஸ்ரீமதி ப. த. இரத்தின சவுந்தர அம்மாளால் "கடவுட்பக்தி" என்னும் விஷயமாகச் செந்தமிழில் தெளிவாக வாசிக்கப்பட்டது. ஸ்ரீமதி ப. த. காந்திமதி அம்மாளாலும் ஸ்ரீமதி வே. பாமபாக்கிய அம்மாளாலும் நதிப்புரை கூறப்பட்டபின் அக்கிராசனரின் நதிப்புரையோடும் தேவார பாராயணத்துடனும் கூட்டம் 8 மணியளவில் சமாப்தியாயிற்று. —நடித.

# இந்துசாதனம்.

யாழ்ப்பாணம் சிவவருஷ
மார்கழிமீ ௨ திங்கட்கிழமை.

## துவிசக்கரமும் நமது வாலிபரும்.

துவிசக்கரவண்டி (Bi-Cycle) யாழ்ப்பாணத்திற் காலந்தோறும் அதிகரித்துவருகின்றது. இந்த வண்டி ஒருவர் ஏறி ஊர்தற்கு ஆக்கப்பட்டதேயன்றி இருவர் மூவர் ஏறி ஓடுவதற்காகியதல்ல. ஆனால் நமது யாழ்ப்பாணத்திலே உத்தியோகத்தர் மரியாதையை விரும்பும் சிலர் ஒழிய ஏனைய சுருட்டுக்காரரும் பள்ளிக்கூட வாலிபரும் மற்றை வாலிபரும் இந்த ஒற்றைச்சுவட்டு வண்டியை ஏககாலத்தில் இருவர் மூவர் ஏறுவதற்கு உபயோகிக்கின்றார்கள். மேலே சொல்லப்பட்ட வாலிபருள் ஒருவர்மாத்திரம் ஒரு வண்டியில் ஏறிச் செல்லுதலைக் காண்டலரிது; ஒருவர் ஆசனத்திலிருந்து காலால் இயக்க, அவருடைய தோளிற் பிடித்துக்கொண்டு இன்னொருவர் பின்னே நிற்க, நிற்கின்ற அவரைப் பிடித்துக்கொண்டு பின்னொருவர் நின்று போதலையுங் காணலாம். இந்த விதமாக இவ்வண்டிகள் மும்மடங்கு பாரத்தோடு போதலால், மோட்டரதச் சஞ்சாரம் இடையீடின்றி நடக்கும் இக்காலத்தில் தெருவீதிகளில் நேரும் அநர்த்தங்களும் அபாயங்களும் பல. இவர்கள் இப்படி ஏறிச் செல்லும்போது காத்திராப்பிரகாரம் இடமுட்டாக மோட்டரதமும் அதிக பாரமேற்றிய மாட்டுவண்டியும் எதிரெதிரே வந்துவிட, தெருவோரத்திற் கல்லுக் குழியலுங் கிடக்க, துவிசக்கரவண்டியின் சாரதி தான் ஊர்ந்துவந்த வண்டியை நினைத்தமாத்திரத்தே தடுக்கமுடியாது படும்பாடும் அதனாற் சிற்சிலசமையங்களில் நேரும் விபத்தும் பல.

இற்றைக்குச் சிலநாட்களின் முன்னர்ச் சோனகதெருவிலுள்ள ஐந்துசந்தியில் நழுவ வாலிபர் மூவர் ஆனைக்கோட்டையிலிருந்து மதுபானிகளாய் ஒரே துவிசக்கரத்தில் மீண்டு வரும்போது, யாழ்ப்பாணத் தபாற்கந்தோரிலிருந்து காகிதம் எடுத்துக்கொண்டு வட்டுக்கோட்டைக்குச் செல்லும்படி வந்த மோட்டர்பஸ் ஐந்துசந்தியில் வந்து இடமுட்டாக எதிர்ந்துவிட, இந்த மூன்று வாலிபரும் ஏககாலத்தில் குறித்த வண்டியை எறிந்துவிட்டுத் தம்முயிர் தப்பினர். துவிசக்கரம் மோட்டர்பஸ்சின் சிற்களில் அகப்பட்டு நெரியுண்டு, எடுக்க முடியாது கூட்டியள்ளவேண்டிய நிலையிற் காணப்பட்டது. இச்சமாசாரத்தை அந்தச் சமையத்தில் இப்பத்திரிகையில் வெளியிட்டு, ஐந்துசந்தியில் இவ்வாறான வண்டியபாயங்கள் முன்னரும் பன்முறை நேர்ந்தமையினால் ஒரு போலிசைக் குறித்த சந்தியில் நின்று வண்டிகளின் போக்கு வரவுகளைக் கிரமப்படுத்தும்படி நியமிப்பது நன்மையாகுமென வெளியிட்டிருந்தேம். நாம் எழுதியபிரகாரமே போலிஸ் அதிகாரிகள் இப்பொழுது ஒரு போலிசை அந்த இடத்தில் நிற்கும்படி செய்திருக்கின்றார்கள். இச்செயல் வியக்கத்தக்கதாம். நிற்க,

சென்றசனிக்கிழமை (15-12-28) காலை 10 மணிவரையில், வண்ணார்பண்ணைச் செட்டித்தெரு மிஷன் ஆங்கில வித்தியாசாலைக்கு எதிரில் யாழ்ப்பாணங் காங்கேசன்றுறைப் பகிரங்கதெருவில் துவிசக்கரம் மோட்டர்வண்டியென்னு மிவை முட்டுண்டமையினால் ஒரு ஆபத்து நேர்ந்தது. அச்சமையத்தில் நமது பத்திரிகைப் பிரதிநிதியும் காத்திராப்பிரகாரம் அந்த இடத்தில் வரலாயினர். மல்லாகம் பிறக்ரர் ஸ்ரீ அ. அப்பாத்துரையவர்கள் தமது மோட்டரதத்தில் ஏறிக்கொண்டு பட்டினத்திற்குச் செல்லும்படி அந்த இடத்தில் வரும்போது குழைப்பார மேற்றிய வண்டியொன்று எதிரில் வந்தது. மோட்டரதம் அதற்கு விலத்திக்கொண்டு நிமிரும்போது, குழைவண்டி மறைவிற் பின்னே இரு வாலிபர் ஏறிய துவிசக்கரமொன்று இடமுட்டாக, மோட்டர்ரதத்தின்முன் எதிர்ப்பட்டது. அந்த இடத்தில் தெருவோரமோ மதகின் பக்கத்தே அதிக செங்குத்தாகவுள்ளது. மோட்டர் வண்டிச்சாரதி வண்டியைத் தடுக்கமுயன்றும் வாய்க்கவில்லை. இரண்டு வண்டிகளும் முட்டுண்டன. ஒற்றைச்சுவட்டு வண்டியில் ஏறிய இரட்டைவாலிபருள் இருந்து செலுத்திய வாலிபன் கீழே வீழ்ந்து தன் காலில் ஒன்று அடியுண்டான்; நின்று வந்த வாலிபன் கையிற் காயமடைந்தான். துவிசக்கரவண்டி மோட்டர்ரதவண்டியின் முன் சிற்களுட் சேளவுண்டு முரிந்து கிடக்கக் காணப்பட்டது; சனங்கள் வந்து கூடிவிட்டார்கள்; இதற்கிடையில் அந்நிலையிற்றானே மோட்டரதத்தையும் சாரதியையும் விட்டுவிட்டு பிறக்ரர் அப்பாத்துரை போலிஸ்தானத்திற்குப் போய்விட்டார். தட்டுண்டு வீழ்ந்து வாளாக் கிடந்த வாலிபரின் சுற்றத்தவர் சிறிதுநேரத்தில் துயரத்தோடும் ஆத்திரத்தோடும் ஆங்கு வந்து சேர்ந்தனர். மோட்டரதச் சாரதி 'எவன்' என்று வினவினர்; அவனைக் கண்டவுடனே பிடித்து நையப் புடைக்கத் தொடங்கினர். சாரதி ரதத்தை விட்டுப் போகப் பயந்து சிறிதுநேரம் நின்று அடி வாங்கினன்; அடியின் அகோரம் பொறுக்க முடியாமல் ஓலமிட்டுக்கொண்டு ஓடத் தலைப்பட்டான்; ஓட ஓட அடித்தார்கள், இடித்தார்கள்; தானாக நழுவி வீழ்ந்ததோ இன்றேல் யாரும் உரிந்தார்களோ—நமது பத்திரிகைப்பிரதிநிதி அதனை அவதானிக்க முடியவில்லை—குறித்த சாரதி சேளபீனதாரியாய் ஓடிப்போய் அயலேயுள்ள ஆறுமுகநாவலர் புத்தகசாலையில் அடைக்கலம் புகுந்தான்; அடிப்போர் ஆங்குத் தொடர்ந்து வர, அதுகண்ட புத்தகசாலை அதிபர் சாரதியை உள்ளே விட்டுக் கதவைப் பூட்டிக்கொண்டனர். நையப் புடையுண்ட சாரதி கிடந்தநிலை மிகப் பரிதாபமானதாம். புத்தகசாலை யதிபர் கடையைப் பூட்டிராவிட்டால், சாரதியின் உயிரைக் காண்ப தரிதாகுமென்று நமது பிரதிநிதியும் மற்றையோருங் கூறினர். புத்தகசாலை யதிபரும் வேறு சிலரும் சாரதிக்குச் சைத்தியோபசாரஞ் செய்தனர், தெருவில் வீழ்ந்து கிடந்த அவனுடைய வஸ்திரத்தையும் யாரோ கொண்டுவந்து அவனுக்கு உடுத்திவிட்டனர். சிறிதுநேரத்தில் போலிஸ் ஒருவர் மோட்டரதம் நிற்குமிடத்திற்கு, குறித்த பிறக்ரரோடு வந்துசேர்ந்தார். கடையிற் கிடந்த சாரதியை ஆங்கு வரும்படி போலிஸ் ஆள்அனுப்ப, சாரதி சூடுகண்ட பூனை அடுப்பங்கரையை நாடாதவாறு, கடையைவிட்டு வெளியே போகப் பயந்து கத்தினன்; அங்கு நின்ற சிலர் அவனைத் திடஞ்சொல்லி அழைத்துக் கொண்டுபோய் விடுதலும், போலிஸ் சாரதியையும் காயமுற்ற மற்றைய இருவரையும் மோட்டர் வண்டியி லேற்றிச்செல்ல, பிறக்ரர் அப்பாத்துரையும் பின்சென்றனர்; மோட்டர் ரதச் சில்லில் அகப்பட்டு நெரியுண்டு கிடந்த துவிசக்ரவண்டிக்கு முந்தியே "பிறேய்க்" (அதன் வேகத்தைத் தடுத்து நிற்கச்செய்யும் பகுதி) இல்லையென்று அங்கே நின்ற துவிசக்கரமூரவல்லார் சிலர் சொல்லினர்.

துவிசக்கரவண்டியில் இயல்புக்கு விரோதமாக இருவர் மூவர் ஏறி ஊர்ந்தாலும், பாரம் வைக்கப்பட்டிருந்தாலும் ஓடும்போது அதன் வேகத்தை நினைத்தபடி நினைத்த இடத்தில் நிற்கச்செய்தல் முடியாதகாரிய மென்பது அநுபவத்திற் கண்டதாம். அதிலும் "பிறேய்க்" இல்லா வண்டியாயின் பின் யோசிக்கவேண்டியதில்லை. இந்தவிதமான அநர்த்தங்கள் கொழும்பு முதலியவிடங்களிற் பலமுறையும் நேர்ந்தமையினால், அங்குள்ள அதிகாரிகள் துவிசக்கரவண்டியில் ஒருவருக்கு மேல் ஏறிச் செல்லவொண்ணாதெனப் பிரமாணஞ்செய்துவிட்டனர். இந்தப் பிரமாணத்தை இங்குள்ள அதிகாரிகளும் விரைவில் அநுசரித்தல்வேண்டும். மேலும் தெருவீதியில் ஊரப்படும் ஒற்றைச்சுவட்டு வண்டிகளுள் பிறேய்க் இல்லாத வண்டிகளைக் கண்டுபிடித்து, அப்படி ஊர்பவர்களுக்கு நீதிஸ்தலமூலமாகத் தண்டனை செய்விக்கத்தக்க அதிகாரத்தைப் போலீசருக்குக் கொடுத்தல்வேண்டும்.

## சிவஞான போதம்.

(மூன்றும் பாகம்)

வண்ணை, ஸ்ரீ வை. இராமநாதன் அவர்களால் அநுவதித்துப் பிரகடனஞ்செய்யப்பட்டது.

[40-ம் புத்தகம், 44-ம் இலக்க இந்துசாதனப் பத்திரிகையின் தொடர்ச்சி.]

சூத்திரம்—௯.

ஊனக்கண் பாசமுணராப் பதியை
ஞானக்கண்ணினிற் சிந்தைநாடி
உராத்துணைத் தேர்த்தெனப் பாசமொருவத்
தண்ணிழலாம்பதி விதியெண்ணுமஞ்
[செழுத்தே.

மூன்றும்பாடம்:—சிவோகம் பாவனையில் முற்றிய உயிர் சிவத்தின் ஞான சொரூபத்தைக் காணும்—

சிவோகம் பாவனையில் உறைத்து நிற்கும் உயிர் முன், பாசப்பொருள்கள் விரைந்து மறையும் என்றும் என்றால் அவ்வுயிர் முன், அப்பாவனையின்போது விளங்கித் தோன்றுவது எது? ஆராய்வாம்.

படிகத்திற்கென்று ஓர் சொரூபமிருப்பினும், அதனை அடுத்து நிற்கும்பொருள்களின் நிறங்கள், அச்சொரூபத்தினை விளங்கவொட்டாது மறைக்கும். இது நாம் அறிந்த விஷயம். ஆனால், அவ்வேற்று நிறங்களைப் படிகத்தின் நிறமல்லவென்று கண்டு அவ்வேற்று நிறங்களை அகற்றிய ஒருவனுக்குத் தோற்றுவது, அப்படிகத்தின் சுவயஞ்சொரூபமேயாகும். இதுபோல, உயிரையடுத்து நிற்கும் பாசப்பொருள்களின் இயல்புகள், உயிரறிவின்கண் வியாபித்து நிற்கும் சிவசொரூபத்தை, அவ்வுயிருக்கு விளங்கவொட்டாது தடுத்து நிற்பனவாகும்.

இப்பாசப்பொருள்கள் சிவோகம் பாவனையால் உயிருக்கு விளங்காது மறைய, அப்பாவனையின்போது அதனறிவில் விளங்கித் தோன்றுவது சிவத்தின் ஞான சொரூபமேயாகும். அதாவது சிவத்தின் "அருள்வடிவம்." இவ்வடிவம் உயிருக்கு விளங்கும் வரையும், உயிர் பாசப்பொருள்களால் உண்டாகும் துயரவெப்பத்தில் அழுங்கியே கிடக்கும். அவ்வுயிருக்கு, சிவோகம் பாவனையின்போது, இந்த ஞானவடிவமே தண்ணிழல்போல உதவிப் பாசப்பொருள்களால் வரும் துயரவெப்பத்தையாற்றும்.

இக்கருத்தமையவே இச்சூத்திரம் "தண்ணிழலாம்பதி" என்றோதியது என்றும்; 'பதி' யென்றது அருள் வடிவத்தையும் உணர்த்துமென்றும் ஆன்றோர் கூறியுள்ளார்.

நான்காம் பாடம்:—சிவத்தின் ஞானசொரூபத்தைக்கண்ட உயிர், அக்காட்சியில் உறைத்து நிற்றற்கு முத்தி பஞ்சாக்கரத்தை உச்சரிக்கவேண்டும்

சிவோகம் பாவனையிலுறைத்து நிற்கும் உயிருக்கு அருள் வடிவம் விளங்கித் தோன்றும். என்றால், அச்சொரூபக் காட்சியில் உயிர் பிறழாதிருத்தலும் வேண்டுமே. உயிர் சிவோகம் பாவனையிற் சிறிது குன்றுமேல், மீளவும் அதற்கு ஆணவ மறைப்புமேற்பட்டு, அருள் வடிவம் மெல்லமறைந்து விடுமே பாசப்பொருள்கள் விடயமாகத் தொடங்கிவிடுமே. ஆகவே அச்சொரூபக்காட்சியாகிய அருள்வடிவ தரிசனத்திலேயே உயிர் பிறழாது உறைத்து நிற்றற்கு ஏதும் உபாயம் உளதோ என்பதைச் சிந்திப்பாம்.

ஒரு நூலை நாம் படிக்கும்போது அந்த நூலிலுள்ள விஷயங்களில் நமது சிந்தனையை நிறுத்துவதற்கு விரும்புகின்றோம். நமது சிந்தனையோ தொடர்பாகவும் இடையீடின்றியும், எதனிலும் நிற்குமாறில்லையென்பது நமது அநுபவம். ஒரேவேளை இடமொன்று மாறி மாறிக்கொண்டே வருகின்றது. அவ்வாறு மாறாமல் அல்லது மறக்காமல் இருப்பதற்கு சில உபாயங்களைச் செய்கிறோம். இவ்வுபாயங்களிற் சிறந்தது, படிக்கும் விஷயங்களைச் சரிவரப் பதியும்படியும், தொடர்பாய் அச்சொற்குறிப்பைக்கொண்டு நாம் உணரும்படியும் அமைத்துள்ள ஒரு சொல்லை நம் மனத்திலே தியானம்பண்ணிச் சொல்லுதலாம். ஒருவாறு இதுபோல, சிவோகம் பாவனை செய்யும் உயிரும், அப்பாவனையிலும், அதன்கண் விளங்கும் சிவஞானக்காட்சியிலும் பிறழாது நிலைநிற்றற்கு ஒரு உபாயத்தைக் கையாள்வது அவசியம். அதாவது, உயிருக்குப் பாசப்பொருள்கள் மறைந்து நீங்க அவ்வுயிர் சிவஞானக்காட்சியைப் பெறும் என்னும் உண்மையை விளக்கும் சொல்லைத் தன்னறிவினுள்ளே கணித்தல் வேண்டும்.

இச்சொல் முத்திபஞ்சாக்கரம் எனப்படும் இம்மஹாமந்திரத்தின் உருவத்தையும் பொருளையும் அநுபவத்தில் உணர்ந்துள்ளார், சிவோகம்பாவனையில் மிகப் பழகிச் சிவஞானக்காட்சியில் அழுந்திநிற்கும் ஞானாசாரியரேயாவர். இத்தகைய ஆசிரியரிடத்தே இம்மஹாமந்திரத்தை உபதேசக்கிரமமாகக் கேட்டுத் தெரிந்துகொள்ளல்வேண்டும்.

இக்கருத்துக்களை யுணர்த்தவே இச்சூத்திரம் 'விதியெண்ணுமஞ்செழுத்தே' என்று ஓதிற்று. இங்கே 'விதி' என்பது விதிப்படியென விரியும். அதாவது இம்மஹாமந்திரத்திலுள்ள எழுத்துக்கள் எந்தவரிசையிற் றொடுத்து நிரைத்தால் மேலே விளக்கப்பட்ட பொருளைக் குறிக்குமோ அந்த வரிசையில் என்பது, "விதி" என்ற பதத்தின் பொருள் என்றார் உண்மைநெறி கண்டார்.

"எண்ணும்" என்பது "எண்ணுக" என நின்றது. அதன் பொருள் "உச்சரிக்க" என்பதாம். (வியங்கோள் வினை.)

சூத்திரசாராம்சிரகம்.

1. தன்னியல்பு உணர்த்தப்பெற்ற உயிர், சிவத்தைத் தன்னுள்ளே சிவோகம் பாவனைசெய்து காடும்.
2. சிவோகம்பாவனைசெய்யும் உயிருக்குப் பாசப்பொருள்கள் விரைந்து மறையும்.
3. சிவோகம்பாவனையில் முற்றிய உயிர் சிவத்தின்ஞானசொரூபத்தைக்காணும்.
4. சிவத்தின் ஞானசொரூபத்தைக் கண்ட உயிர் அக்காட்சியில் உறைத்து நிற்றற்கு முத்திபஞ்சாக்கரத்தை யுச்சரித்தல்வேண்டும்

இச்சூத்திரம், பேறு முதலியவற்றை யுணர்ந்த உயிருக்கு, அப்பேறு பயப்பதாகிய சாதனங்களையும் அவைகளைச் செய்யுமாறும் வகுத்துச் சொல்லுதற்கு எழுந்ததென்க.

௯-ம் சூத்திரம் முற்றுப்பெற்றது.
(மூன்றும் பாகம் முற்றுப்பெற்றது.)

(வரும்)

## சிவலிங்க தத்துவார்த்தம்.

(தேவகோட்டை-சிவாகம பரிபாலன சங்கத்துச் சித்தாந்தபோதகர் திரு. போ. முத்தையபிள்ளையவர்கள் "சிவநேசன்" பத்திரிகையில்வெளியிட்டது)

சிவலிங்கத்தின் உண்மைப் பொருளிதுவென விளக்குவதே இவ்வுபந்நியாசத்தின் கருத்தாம் தத்வார்த்தமென்பது உண்மைப்பொருளெனப்படும்

சிவலிங்கமென்னுஞ் சொற்றொடர் சிவமாகிய லிங்கமென விரியும். விரியுங்கால் சிவமென்னுஞ்சொல் தன்மையையும் லிங்கமென்னுஞ் சொல் தன்மையையுடையதனையுங்குறிக்கும். குறிக்கவே லிங்கத்தின் தன்மை சிவமெனக் கொள்ளக்கிடக்கும். இதனைச் சாரைப்பாம்பு என்றவிடத்து சாரையாகிய பாம்பென விரித்து பாம்பின்றன்மை சாரையெனக் கொள்வது போல அறிக.

ஆகவே சிவலிங்கமென்னுஞ் சொல்லிற்கு லிங்கத்தின் தன்மை சிவமென்பது பொருளாதலால் முதற்கண் லிங்கமென்னுஞ் சொற்பொருளையும், பின்னர் சிவமென்னுஞ் சொற்பொருளையும் விசாரித்து அதன்பின்னர் சிவலிங்கமானது பிருதிவி சம்பந்தமான மண், கல், படிகம், செம்பு, தங்கமுதலியவற்றி லமைத்திருப்பதின் கருத்தையும் விசாரிப்பாம். அன்றியும் ⁰சூசிகடாக நியாயம்பற்றி லிங்கமென்னுஞ் சொற்பொருளை முன்னரும் சிவமென்னுஞ் சொற்பொருளைப் பின்னரும் விசாரித்தலமையும்.

லிங்கமென்னுஞ் சொல் அடையாளமென்னும் பொருளை யுணர்த்தும். அடையாள மென்பது ஒருபொருளை இதுவென உணர்த்துவதற்குச் சிறந்த குறியாம். அக்குறி பிறிதொரு பொருளை யுணர்த்தாது குறித்த பொருளை யுணர்த்தும். அக்குறியை எப்போது உபயோகப்படுத்துவதெனவாராயுமிடத்து ஒரு பொருளை பிறிதொருவருக்கு நேரிற்காட்டமுடியாத சந்தர்ப்பத்தில் அப்பொருள் இத்தன்மைத்தாயிருக்குமென்று அத்தன்மையை விளக்குகின்ற ஒரு குறியைக்காட்டுவது வழக்கமாம். அதுபோலச் சிவமாகிய பொருளை நேரிற்காட்டமுடியாத சந்தர்ப்பத்தில் அச் சிவப்பொருளித்தன்மைத்து என்றுகாட்டும் அடையாளமாயிருந்தது லிங்கம். சந்திரசேகரர் முதலிய திருமேனிகளெல்லாம் பிறிதோரண்டத்துப் பேசுந் தெய்வமாகக் காணப்படுமாதலால் அத்திருமேனிகளை யுள்ளவாறே காட்டும் அம்மூர்த்தங்களுக்கு லிங்கமென்ற பெயர் கிடையாது. உருவப்பொருளல்லாத சிவப்பொருளைக் குறிப்பதற்கே லிங்கமெனப்பட்டது இனிலிங்கமென்பது எல்லாந்தோன்றி ஒடுங்குதற்குரிய மூலமெனவும் சித்திரித்த லெனவும் பொருள்படும், அவ்வாறு படுங்கால் பீடம் லிங்கமாய்க்காணப்படுவது அவ்வியக்த லிங்கமெனவும் சந்திரசேகரர் முதலிய மகேசுரமூர்த்தங்கள் வியக்த லிங்கமெனவுமறிக.

இனி, சிவமென்னுஞ் சொல்லில் சிகரம் சிவத்தையும் வகரம் அருளையுங் குறிக்கும். இவ்வுண்மையை உண்மை விளக்க முதலிய சித்தாந்த நூல்களிற் காண்க. வகரமின்றியே சிகரமட்டும் சிவத்தை யுணர்த்துமென்றல் எவ்வாறு பொருந்துமெனின் செம்மையாகிய அக்கினியென்றபொழுது சூட்டைக் குறிக்காத செம்மையென்னுஞ் சொல் சூட்டையுடைய அக்கினியை யுணர்த்துவதுபோலச் சிகரமே வகரத்தோடு கூடிய சிவத்தை யுணர்த்துமென்க சிகரம் சிவத்தை எவ்வாறுணர்த்துகின்றதெனின் சிகரம் பற்றின்மையைக் குறித்த ஓரெழுத்தொருமொழி.

⁰ சூசிகடாக நியாயம்—சூசியென்பது ஊசி கடாகமென்பது கடாரம், கடாரத்திற்காகப் பொருள் கொடுத்தவன் முன்னரும் ஊசிக்காகப் பொருள் கொடுத்தவன் பின்னருமாயிருக்கவும் கடாரத்தின் வேலைகள் நீடிப்பையுடையதாயும் ஊசியின் வேலை அவ்வாறில்லாததாகவு மிருத்தல்பற்றிப் பின்னர் பொருள் கொடுத்தவனுக்கு முன்னர் ஊசியைச் செய்து கொடுத்துவிட்டு முன்னர் பொருள் கொடுத்தவனுக்கு பின்னர் கடாரத்தைச் செய்து கொடுத்தலாம். அதுபோல் லிங்கமென்னுஞ் சொற்பொருள் சுருக்கமும் சிவமென்னுஞ் சொற்பொருள் பெருக்கமுமாம்.

இதனை "காயோட்டு மந்திரம் ஈதனிருப்பிடம்—காயோட்டுமந்திரம் நான்மறை வேதம்—காயோட்டு மந்திரம் சாதாக்கசோதி—காயோட்டுமந்திரம் காமதியோமே" என்னும் திருமந்திரம் வலியுறுத்தும். வகாரம் வாவென்னுங் கிருபைக் குறிப்பை யுணர்த்து மொழியாய்க்குறுகி நின்றது. ஆகவே சிவமென்னுஞ்சொல் பற்றின்மையினால் எப்பொருட்கும் வேறாயும் கிருபையினால் எல்லாப் பொருளுடனொன்றாயும் நிற்குமென்பதைக் குறிப்பதாம். சிகர வகாரங்கட்குக் கூறிய இப்பொருள் சித்தாந்த மரபு என்னு நூலிற் கண்டது. வகாரமானது கூடாமல் சிகாரந் தனித்து நின்றவிடத்துந் தொனியினால் சிவத்தையுணர்த்தாமையால் வகாரங் கூடி நின்றே தொனியினால் சிவத்தை யுணர்த்தும். இதுபோல அருளோடு கூடிப் பிரிப்பின்றியே சிவம் விளங்குவதாகும். அருளெனினும் சத்தியெனினுமொக்கும். சாவகன் நாயகி கூடியதையே உலகில் மங்கலமென்று சிறப்பித்துக் கூறுவர். கூறினும் ஒருகாலத்தில் கூடுதலும் மற்றொரு காலத்தில் பிரிதலுங் காணப்படலால் அக்கூட்டத்திற்குரிய மங்கலம் நித்தியமன்று. சிவபெருமானுக் திருவருளுங்கூடிய கூட்டம் அக்கினியிற் சூடுபோல என்றுமுள்ளதாதலால் சிவமென்பது மங்கலத்தையுடையது எனவுணர்த்தும் அன்றியும் ஏனைப்பொருள்களாலுண்டாகும் மங்கலம் தனக்கு மேற்பட்ட பொருளை நோக்குமபோது அமங்கலமாய் முடியுமாதலின் சிவப்பொருள் எல்லாப் பொருளினும் வேறாயும் எல்லாப்பொருளுங் கூடி நிற்றலால் எல்லாப் பொருளுக்கு மங்கலத்தைக் கொடுப்பதில் தனக்கு மேலொருமங்கலப்பொருளின்மையை உணர்த்துதலின் சிவமென்பது மங்கலத்தைத்தருவதெனவுமுணர்த்தும். (வரும்.)

---

## காலநிலை.

மழை ஒருவாறு வெளித்துவிட்டது; சென்ற இரண்டு மூன்று நாட்களாகப் பனி பெய்கின்றது; மார்கழிமாசத்திற்குரிய குளிர் தொடங்கிவிட்டது; ஊரிலே காய்ச்சல் சின்னமுத்து வயிற்றுளைவு முதலிய நோய்கள் பலரைப் பிடித்து வருத்துகின்றது. பெருமழை பெய்து நீர் அதிகம் நிற்றலால் இந்நீர் வற்றுங் காலமாகிய தை மாசி மாதங்களில் இந்நோய் சுரம் முதலிய நோய்கள் அதிகப்படுமென்று எண்ணவேண்டியிருக்கின்றது. நோய்வந்தபின் மாற்ற முயல்வதைக் காட்டிலும் வாராமற் றடுப்பதே புத்தி என்ற பிரகாரம் இந்த இரு மாதங்களிலும் சனங்கள் சுகாதார விஷயமாகச் சிறிது அவதானமாயிருத்தல் நன்றாம். மழையினாலும் புறவெள்ளம் வீழ்தலும் ஈண்டுள்ள அநேக கிணறுகள் துர்நாற்றத்தோடு கூடிய அதிக தண்ணீருடன் காணப்படுகின்றன. பொருட்செலவையும் சிரமத்தையும் பாராமல் எல்லாரும் ஒருமுறை தத்தம்வீட்டுக் கொல்லைகளிலுள்ள கிணறுகளை இறைப்பித்தல் நன்றாம். நாளம்பின் நாயசமாயுள்ள செடி கொடி புல்பூண்டுகளை யெல்லாம் வெட்டிப் புதைத்தேனும் எரித்தேனும் விடுதல் வேண்டும். பனியிலும் வெயிலிலும் குளிர்காற்றிலும் இராக்காலத்திலும் வெளியிற் போதல், அதிக சிரமமான வேலைகளைச் செய்தல், பகல்நித்திரைகொள்ளுதல், இலகுவிற் சீரணிக்காதவெண்ணெய்ப் பண்டங்களையும் இன்ன பிறவற்றையும் உண்ணுதல், அகாலத்தில் உண்ணுதல், பசியெடுத்தபின்னன்றி உண்ணுதல் ஆகிய இவைகளைத் தவிர்த்துவிடுதல், வேண்டும்; பானத்திற்கு இம்மாசங்களில் வெந்நீரை உபயோகித்தல் நன்றாம். இவைபோன்ற சுகாதாரத்திற்குரிய ஏனைய ஒழுக்கங்களையும் இக்காலத்திற் கைக்கொண்டொழுகின் நோயின்றி ஒருவாறு வாழ்தல் ஆகும்.

---

## பிள்ளைப் பாசங் கொடிது! கொடிது!!

மட்டக்களப்பு வாவியில், ஆங்குள்ள மத்தியகல்லூரி ஆசிரியர் சிலரும் மாணவர் சிலரும் நீராடச் சென்றவிடத்து ஆசிரியருள் ஒருவராகிய மிஸ்ரர் எட்வேட் அம்பலவாணர் என்பவர் மூழ்கி யிறந்தனரென்பதைச் சென்ற பிரசுரத்தில் வெளியிட்டிருந்தோம். நல்லூரைச் சேர்ந்த அத்தியடியில் வசித்த குறித்த அம்பலவாணரின் தாய் தனது அருமைப் புதல்வன் மூழ்கி மாண்ட துக்கசெய்தியைக் கேட்டவுடனே ஏக்கங்கொண்டு அதனால் அடுத்தநாள் மாண்டனளென்ற பரிதாப செய்தியைக் கேள்வியுற்றோம்.

---

## வாணம் விட்டோர் தண்டிக்கப்பட்டமை

இந்த டிசெம்பர்மீ 11௳ யாழ்ப்பாணம் பொலிஸ் நீதிபதி மிஸ்ரர் லயிற் என்பவர் முன்னிலையில், அநுமதியின்றி அபாயகரமான வாணங்களைக் கொளுத்தி உயிர்ச்சேதமும் பெரும் ஊறும் விளைத்தாரென்ன உரும்பராய் வாசிகள் 14 பேர் குற்றம் பாரிக்கப்பட்டு நின்றார்கள். இவர்கள் மானம்பூத் தினத்தன்று பெரிய ஆகாய வாணங்களைக் கொளுத்தியமையினால் வாணமொன்று பட்டு ஒருவன் மாண்டான்; இருவர் அபாயகரமான ஊறடைந்தனர். ஆனால் இவர்கள் தாங்கள் வாணங் கொளுத்தவில்லையென்றும் அதனால் நிரபராதிகளென்றும் சாதித்து நின்றனர். நீடித்த விசாரணை செய்து நீதிபதி உண்மையை யறிந்து வாணம் விட்டவர்களாகிய முதன் மூன்று எதிரிகளுக்கும் தனித் தனி ஒவ்வொருமாசக் கடுஞ்சிறையும் தனித்தனி ரூபா 50 அபராதமும் விதித்தனர். ஒழிந்த 11 எதிரிகளும் தனித் தனி 25 ரூபா அபராதம் விதிக்கப்பட்டனர் அங்குள்ள தலைமைக்காரர் பட்சபாதமின்றி இக் குற்றத்தைக் கண்டுபிடிக்கத் துணைபுரிந்து தன் கடமையைச் செய்ததனிமித்தம் உரும்பராய் வாசிகள் சிலர் அத்தலைமைக்காரரைக் குறைகூறுகின்றனரென வறியலானோம். வேலி பயிரை மேயவில்லையென்பதுதான் இவர்கள் தலைமைக்காரர்மீது கூறுங் குறைபோலும்.

---

## அரச சக்கரவர்த்தியின் சுகவீனம்.

பிறதேசம் போயிருந்து, நமது அரச சக்கரவர்த்தியின் சுகவீனத்தைக் கேள்வியுற்று மீண்ட உவேல்ஸ் இளவரசர் வந்தவுடனே தமது தந்தையார் கிடக்கும் மாளிகையையடைந்து அவரைப்பார்த்தனர் நமது சக்கரவர்த்தி பலமணித்தியாலங்களாக நித்திரை செய்தாரென்று டிசெம்பர்மீ 15௳ கிடைத்த தந்திச்சமாசாரத்தால் அறியக்கிடக்கின்றது. நீடித்த நித்திரை சுகத்திற்கு அறிகுறியாகுமென டக்ரர்மார் அபிப்பிராயப்படுகின்றனராம்.

---

# சமாசாரக்கொத்து.

—:0:—

### நாயைக்கொல்லும் பூனை.

காட்டு நாய்கள் பல சேர்ந்து ஒரு புலியை எதிர்க்குமாயின், பின் அந்த இடத்தில் புலியின் எலும்புக் குவியல்களே காணப்படும். புலியின் இறைச்சியை விரும்பியுண்ணும் பிராணி காட்டு நாய் ஒன்று தான். எனினும் சிங்கப் புலி நாய்களுக்குப் பயப்படுவதில்லை. பூமா என்ற காட்டுப் பூனையோ, புலியையும் கொன்றுவிடக் கூடிய காட்டு நாய்களின் பரம விரோதியாயிருக்கிறது. அப்பூனையைக்கண்ட மாத்திரத்தில் நாய்களெல்லாம் அங்கம் நடுநடுங்கிக் குன்றிச் செயலற்று நின்றுவிடவே, அது நாய்களைக் கொன்று புசித்து விடுகின்றது.

☆ ☆ ☆

### மாண்டவள் மீண்டாள்.

தென் திருவாங்கூரில் ஆச்சரியமான சம்பவம் ஒன்று அண்மையில் நிகழ்ந்தது. கலியாணமான ஒரு பெண் விஷபேதி கண்டு இறந்து விட்டாள். அவள் கணவன் தம் இளம்மனைவி மீதிருந்த ஆபரணங்களைக்கழற்ற விரும்பாததினால், அப்பிரேதத்தை அப்படியே நிலையில் வைத்துத் திமூட்டி வீடு சேர்ந்தனர். சவத்தின் மீதிருந்த நகைகளைக் கூர்ந்து நோக்கிய கள்ளர்கள் உடனே விறகைப் பிரித்த போது, பெண் கண்ணையும் வாயையும் திறந்திருக்கக் கண்டனராம். விரைவாக அவளை வெளியே எடுத்து உபசாரனை புரிந்து தேற்றி அவள் கணவரிடம் ஒப்படைத்தார்களாம். இளமனைவி உயிர் பெற்றெழுந்த மகிழ்ச்சியால் கணவன் அக்கள்ளர்களுக்கு 20 ரூபா சன்மானமளித்தாராம். இப்பொழுது அப்பெண் விஷபேதியின்றிச் சுகமாக இருந்து வருகிறாளாம்.

---

## இந்துசாதன ஆலயத்திற்குப் பொருளுதவிய அபிமானிகள்.

(டிசெம்பர்மீ 6௳ இந்துசாதனத் தொடர்.)

| பெயர் | விலாசம் | ரூ. | ச. |
|---|---|---|---|
| ஸ்ரீ ச. நாகேந்திரம் | ஐயனார்கோவிலடி | 5 | 00 |
| S சின்னத்துரை | " | 5 | 00 |
| N விசுவலிங்கம் | கோண்டாவில் | 5 | 00 |
| K கமலியாயம் | வைத்தியர் கொட்டடி | 5 | 00 |
| V M சர்மையா | சுன்னாகம் | 5 | 00 |
| வீ. செல்வத்துரை | அவிசாவளைக்கோடு | 5 | 00 |
| ச. சுப்பிரமணியம் | மானிப்பாணிப்பாய், வாக்களித்த ரூபா 500-ல் முதல்முறை உதவியது | 100 | 00 |
| K இளையதம்பி | வட்டுக்கோட்டை | 2 | 00 |
| சி பொன்னம்பலபிள்ளை | பண்டிதர், மூளாய் | 2 | 00 |
| K கனகசபாபதிஐயர் | நல்லூர் | 6 | 00 |
| E சுதிர்காமத்தம்பி | திரிகோணமலை | 5 | 00 |
| N செல்லையா | சலாபம் | 5 | 00 |
| P அமிர்தலிங்கம் | கொழும்பு | 5 | 00 |
| இ முருகேசம்பிள்ளை | பிறக்டர், மானிப்பாய் | 5 | 00 |
| S பொன்னுத்துரை | நல்லூர் | 5 | 00 |
| M E வேலுப்பிள்ளைப்பத்தர் | ஐயனார்கோவிலடி | 2 | 50 |
| மு சி இராசரத்தினம் | இந்துசாதன ஆங்கிலபத்திராசிரியர் | 10 | 00 |
| புங்குடுதீவு ஸ்ரீ சுப்பிரமணிய சன்மார்க்க சபை | | 5 | 00 |
| N சின்னப்பாபிள்ளை | பெல்மதுலே | 5 | 00 |

(தொடரும்)

ச. அம்பிகைபாகன்,
மனேஜர்.

---

### அழகைக்குறித்த சண்டை.

கல்கத்தாவில் தாராபாய் என்னும் தாசியிடத்தில் லுந்தன், புத்து என்னும் இரு பின்பாட்டுக்காரர்கள் இருந்தனர். நூர்ஜகான் என்னும் வேறொரு தாசியிடத்தில் காலு, லாலா என்கிற இரு சகோதரர்கள் பின் பாட்டுப்பாடும் வேலையிலிருந்து வந்தனர். இவ்விரு தாசிகளின் பாடகர்களுக்கும் ஏதோ விரோதமிருந்து வந்ததாகக் கூறப்படுகிறது. ஒரு நாள் அங்குள்ள ஒரு தெருவில் இவ்விருகட்சியினரும் சந்தித்தபோது, தங்கள் எஜமானிகளின் அழகைக் குறித்து அவர்களுக்குள் பெருத்த விவாதம் ஏற்பட்டதாம். அப்போது நூர்ஜகான் பாடகர்களில் ஒருவன் ஒரு பெரிய கத்தியினால் லுந்தன் இதயத்திலும், புத்துவின் கையிலும் பலமாகக் குத்திக் காயப்படுத்திவிட்டான். போலீசார் நூர்ஜகானின் பாடகர்கள் இருவரைக் கைது செய்திருக்கின்றனர்.

☆ ☆ ☆

### யானையின் அறிவு.

உலகத்தில் மிகப்பெரிய தரை வாழ்பிராணியான யானை எஜமான் பக்தியிலும், தியாகத்திலும் அநேகமாக மனிதனைப்போன்ற உணர்ச்சி பெற்றதாயிருக்கின்றது. ஒரு ஸர்க்கஸ் காட்சியில் வேடிக்கை காட்டுவதற்குக் கொண்டுவரப்பட்ட ஒரு யானையின் முதுகின் மீது சில் தைலம் கொட்டுண்டு அதன் தோல் அகோரமாகப் பற்றியெரிய ஆரம்பித்து விட்டது. எரிச்சலின் கொடுமையைத் தாங்க மாட்டாத அம்மிருகம் ஓலமிட்டலறி அங்குமிங்கும் ஓடித் தவித்தது. வேடிக்கை பார்க்க வந்தவர்களுள் பெருத்த குழப்பமேற்பட்டதால் பல குழந்தைகள் கைதவறிக் கீழே விடப்பட்டன. ஆனால் ஒரு குழந்தைக்காவது சிறிது ஆபத்தும் சேரவில்லை. ஒவ்வொரு குழந்தையை யணுகியதும் தவித்துக் கூத்தாடிய அந்த யானை ஒரு பயிற்சி பெற்ற நடனமாதே போன்று குழந்தைகளை மிதியாமல் அவ்வளவு ஜாக்கிரதையுடன் தாண்டித் தாண்டிக் குதித்தது.

— "நவசக்தி."

---

## ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் குருபூசை.

நிகழும் விபவ ஆண்டு கார்த்திகைத் திங்கள் ௧௮௳ (3-12-28) நாளாகிய திங்கட்கிழமை மாலை 7 மணியளவில் கண்டித் தமிழக மண்டபத்தில் ஷெ சபையின் ஆதரவின்கீழ், ஐந்தாங் குரவரென வழங்கப்பட்டு வருபவராகிய ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்களது குருபூசை போததனை கிருஷிசப் பகுதியி உத்தியோகம் வகிக்கும் ஸ்ரீ சி. கந்தையா அவர்கள் உபயமாக, ஸ்ரீ சோ. சிவஞானசுந்தரமவர்களால் மிகவும் அன்புடன் நிகழ்த்தப்பட்டது. பூசை முடிந்ததும் ஸ்ரீ சோம. சரவணபவன் அவர்களால் நாவலபெருமானது சரித்திர வரலாறு உபந்நியாசிக்கப்பட்டது. தேவாரமாதியாம் அருட்பாக்கள் பாராயணஞ் செய்யப்பெற்று, யாவரும் விபூதிப்பிரசாதம் முதலிய அணிந்து நிவேதனம் அருந்தியபின் கொண்டாட்டம் 9 மணியளவில் நிறைவெய்தியது.

---

## ஒரு வேண்டுகோள்.

—0—

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் கிளைப் பள்ளிக்கூடங்களுள் ஒன்றாகிய கோக்குவிற் சைவாங்கில வித்தியாசாலை சென்ற 15வருடகாலமாகக் கோக்குவிலிலும் அயற்கிராமங்களிலுமுள்ள சைவச்சிறுவர்கட்கு வித்தியாதானமாகிய பயனையளித்துக்கொண்டு விளங்குகின்றதென்பதை அபிமானிகளெல்லாரு மறிவர். முன்னர் ஐந்தாம்வகுப்புவரையிற் கொண்ட ஆரம்ப பாடசாலையாகவிருந்த இப்பள்ளிக்கூடம் சென்றஇரண்டுவருடமாக எட்டாந்தரம் (E. S. L. C.)*முடிய மாணவர்கள் கற்றற்குரிய வித்தியாசாலையாக்கப்பட்டிருக்கிறது. பிள்ளைகள் காலந்தோறும் அதிகமாக வந்து சேர்ந்தமையினால் இப்பொழுது இவ்வித்தியாசாலை இடத்திற்கு முட்டுப்படுகின்றது. இந்த வருடத்தில், இதன் ஆதாரத் தமிழ்ப்பாடசாலையிலும் சேர்ந்துள்ள பிள்ளைகளையுங் கூட்டிப் பார்க்குமிடத்தில் 90 பிள்ளைகள் புதியவர்களாகச் சேர்ந்திருக்கின்றனரென்பது அறியக்கிடக்கிறது. புதியபிள்ளைகள் இன்னும் வருவரெனக் காத்திருக்கிறோம். ஆனால் இப்பொழுதுள்ள கட்டிடம் இப்பிள்ளைகளெல்லாரையும் கொள்வதற்கு, வித்தியாபகுதியாரின் நிபந்தனைப்படி போதாமலிருக்கின்றது. மேலும் வித்தியாதிகாரிகளின் நிபந்தனைப்படி இங்குள்ள பிள்ளைகளுக்கு "சயன்ஸ்" எனப்படும் சாஸ்திரக் கல்வி ஆவசியகம் பயிற்றல் வேண்டும். அதனைப்பயிற்றுவதற்கு இன்றியமையாததாகிய உபகரணங்களோடுகூடிய சாஸ்திரப் பயிற்சிச் சாலையொன்று வேண்டும். இப்பொழுதுள்ளபள்ளிக்கூட மண்டபம் பல கைகளால் அறைகள் பல வகுக்கப்பட்டிருக்கின்றதேயன்றி உண்மையான ஒரு அறையும் இப்பொழுது இல்லையாம். இப்படியிருத்தலினால் பள்ளிக்கூடத்திற்காகிய இடாப்பு முதலியவைகளைப் பதனமாய் வைத்தல் முடியவில்லை. குறித்த வித்தியாசாலை இவ்வாறான சில குறைகளையுடையதாயிருத்தலினால் மேற்படி வித்தியாசாலை அதிகார சபையார் வித்தியாபகுதியாரிடத்துக் குறை கேட்க வேண்டியவர்களாயும் பெற்றாரைத் திருப்திப்படுத்த முடியாதவர்களாயும் இருக்கின்றனர்.

இந்தக் குறைகளையெல்லாம் நீக்கி இவ்வித்தியாசாலையை நடத்த வேண்டுமாகில் இப்பொழுதுள்ள கட்டடத்தோடு ஒரு புதிய கட்டடத்தையும் புதிதாய் அமைத்தல் ஆவசியகமாகும். இக்கட்டடத்தை அமைத்தற்கு 3500 ரூபா வரையில் வேண்டுமென மதிப்பிடப்பட்டிருக்கின்றது. இவ்வித்தியாசாலை அதிகாரசபைப் பொறுப்பில் இப்பொழுது பணம் குறைவென அறியலானோம். ஆனதால் மேற்படி சபையார் ஊரவர்களின் உதவியை யெதிர்பார்க்கின்றனர். சைவாபிமானிகள் இவ்வாறான வித்தியாஸ்தாபனங்கட்கு முன்னரும் பன்முறை திரவிய சகாயஞ் செய்தனரென்பது மறுக்கொணா வுண்மை. ஆனதினால், இந்தச் சந்தர்ப்பத்திலும் அபிமானிகள் தங்கள் சிறுவர் சிறுமியர் வித்தியாப்பியாசஞ் செய்தற்குச் சிறந்த ஸ்தாபனமாக விளங்கும் இக்கலாசாலையை நன்னிலைப்படுத்த முன்வரல் வேண்டும். அபிமானிகளுள்ளும் கோக்குவிலிலும் அயலூர்களிலும் வசிக்கும் அபிமானிகளே இவ்விஷயத்தில் அதிக ஊக்கங்கொண்டு திரவிய சகாயஞ் செய்து இப்புண்ணிய சைவஸ்தாபனத்தை நிறைவேற்றித்தங்கள் ஊருக்குப் புகழையும் தங்களுக்கு அழியாப் புண்ணியத்தையும் நாட்டி விடல் வேண்டும்.

மு. கார்த்திகேசு,
தலைமை உபாத்தியாயர்.

கோக்குவிற்
சைவாங்கில வித்தியாசாலை,
11—12—28.

[* இவ்வித்தியாசாலை ஈ. எஸ். எல். ஸி. வகுப்பிற் பரீட்சையெடுத்த இருபிள்ளைகளும் சித்தியடைந்தனரென அறியலானோம்.

பத்திராசிரியர்.]

---

## நித்திரை.

—

(முற்றொடர்.)

நித்திரை யென்று சொல்லப்படுவது மனமானது புலன்களின் சம்பந்தமற்று நாபிஸ்தானத்தில் ஒடுங்கி நிற்பதேயாம். ஆன்மாவுக்கு நான்கு இடங்களில் இருப்பிடம் சொல்லப்படுகின்றது. அவை முறையே புருவமையம், கண்டம், இருதயம், கொப்பூழ் என்பனவாம். புருவமையத்தில் ஆன்மா மனம் முதலிய சகல தத்துவங்களோடு நிலைபெற்றிருக்குங்காலமே சாக்கிராவஸ்தையாம். மனம் என்பது ஒரு அணுமாத்திரமான பொருள். அது சரீரத்தைப்பற்றியதும் பற்றாததுமாக நிற்பது. அது புலன்களுக்கும் ஆன்மாவுக்கும் நடுவில் நின்று இரண்டையும் சம்பந்தப்படுத்தும். அப்போது புலன்களின் வழியால், மனதைக்கொண்டு விஷயங்களை ஆன்மா வுணரும். இதுவே சாக்கிரமென்னப்படும்.

நித்திரைக்காலத்திலே சுவாசமாகிய பிராணவாயு 100 அங்குலம் வேகமாய்ச் செல்லுந் தன்மையால் அதிக நித்திரை செய்யின் பிராணவாயுக்கஷ்டப்பட்டு ஆயுள் குறையுமென்பது ஆயுர்வேதக் கொள்கை. பஞ்சபாண்டவர்களுள் அருச்சுனனைப்போன்ற சிலர் வேண்டும்போது நித்திரையை வரப்பண்ணியும், வேண்டாமென்றபோது தவிர்த்தும் கொள்ளுவார்கள். இக்காரணத்தினால் அருச்சுனனுக்குக் குடாகேசன் என்று கூறப்படும். கண்ணை மூடியும் கன்மேந்திரியங்களைச் சலனமில்லாமல் "அல்காமல் அங்கிச் சாய்பெறுவதெக்காலம்" என்னும் பிரமாணப்படி ஓய்வு பெறும்படி செய்தும் ஏதேனும் ஒரு விஷயத்தை, அல்லது ஒரு நாமத்தை நினைத்துக்கொண்டும் மனம் ஒரு நிலைப்படுமாகில் நித்திரை வரும்.

ஒருவனுக்குச் சோம்பல், செகித்தயில், காலத்தப்பித்தயில ஆகியமூன்றும் நீக்க வேண்டுமென்பது வைத்தியர் கொள்கை. சோம்பல்,—"சோம்பரென்பவர் தேம்பித்திரிவர்" என்று சொல்லியபடி முதலில் சுகத்தையே கெடுக்கும் செகித்தயில்—இது முற்கூறிய விரண்டையும் விடக்கொடியது. இதுபொல்லாத நோயையுண்டாக்கும். உலகத்தில் ஒருவன் நோயாளியாயிருப்பதைவிட இறந்துவிடுவது மேலாகுமல்லவா? சிலர் இம்மூன்றையும் இளவயதுமுதல் பழக்கத்திற்குக் கொண்டுவந்து படாதபாடும் அவமானமுமடைகிறார்கள். ஆகையால் அறிவுடையோர் இவைகட்குச் சிறிதும் இடங்கொடாதிருப்பதேயுத்தமம், இதுபற்றியன்றோ நாயனும்,

"வெகுநீர்மையாலி யாவியிராண்குகல்
வெகுநீராராமகைவன்"

என்றார். அஃதாவது சோம்பலும், விரைவிற் செய்தற்குரியவைகளை நீட்டித்தச் செய்யுங் குணமும், மறதியும், நெடுநித்திரையும் ஆகிய இந் நான்கும் இறக்குமியல்பினையுடையவர் விரும்பி யேறு மரக்கலமாம் என்க.

தனது வீட்டில் கிழக்கே தலைவைத்தும், வழிப்பிரயாணத்திலே மேற்கே தலைவைத்தும், மனைவியான்வீட்டில் தெற்கே தலைவைத்தும் படுக்கவேண்டும். வடதிசையிலிருந்து தென் திசை நோக்கிப் பெரிய வேகமாய்ச் செல்லும் பூமியின் மகாசக்தியானது மனிதனது உடலிலுள்ள அப சிக்குமென்பதை யறிந்தவர்கள் வடக்கே தலை வைத்துப் படுக்கமாட்டார்கள். "வாழாது வாழ்ந்தாலும் வடக்கில் தலைவைத்துப் படுக்க லாகாது" என்பது பழமொழி.

படுக்கும்போது இடதுபுறம் கீழிருக்கும்படி படுக்கவேண்டும். வலதுபுறத்தைக் கீழே வைத்துப் படுக்கக்கூடாது. அங்ஙனம் படுத்தால் அசீரணரோகமுண்டாம். இடதுபுறத் திற்றானே இதயம், பித்தாசயம், பாசாசயம், ஆமாசயம் இவைகளிருக்கின்றன. இடது புறம் கீழே வைத்துப் படுத்தால் அடியில் ஆமா சயமும் மேலே பித்தாசயமு மிருக்கும். பித்தாசயமேசடராக்கினியாதலால் அதுஉண்ட உணவை சீக்கிரம் பாகஞ் செய்யும். வலதுபுறம் படுத்தால் மேலே ஆமாசயமும் கீழே பித்தா சயமு நிற்கும். பாசாசயத்தில் சடராக்கினி அவ்வளவு தாக்காது.

நித்திரை செய்யுங்காலத்திலே கைகால்களை நன்றாய்க் கழுவிக்கொள்ளவேண்டும்; மனதில் கவலை யொன்றையும வைக்க கூடாது. காற்றில்லா இடத்திலும், அதிக காற்றுள்ள இடத்திலும் கொசு மூட்டைப்பூச்சிகள் உள்ள விடத்திலும் படுக்க கூடாது. நெடுந் துயில ஒருவனிடந் தோன்றுமாயின:

"வாளுலாமருணனெனும்மகன
ஆயுளின்கணக்கன்
தானெழும்முன்னெழாரைசத்திரக்
கரத்தால்தட்டும்
ஏனைஎழார்வாழ்நாளைவண்குறைத்
தெழுதிக்கொள்வன்
ஆனதனாலவன்அவரிடம்
அணுகுவானே"

என்னும் பிரமாணப்படி ஆயுள் குறையுமென்ப தாம். நித்திரைசெய்புங்காலத்தில்

'அகஸ்தியோமாதவன்சைவமுசுகுந்தோமகா
முனி!கபிலோமுனிராஸ்திகபஞ்சைதே
சுகசாயிக:!!

என்னும் வசனப்படி அகஸ்தியர், விஷ்ணு, முசுகுந்தன் முதலிய இராச இருஷிகள், கபில முனி, ஆஸ்திக முனி முதலிய ஆகிய இந்த ஐவரும் சுகநித்திரையைச் செய் பவர்களாதலால் அவர்களைத் தியானித்துக்கொண்டு நித்திரை செய்தல் வேண்டும். வீட்டின் முகட்டுக்கு நேராகவும் படுத்து நித்திரைகொள்ளக்கூடாது.

சூரியோதயத்திற்குமுன்பே நித்திரைவிட்டெழும்பவேண்டுமென்று ஸ்ரீ மாணிக்கவாசகசுவாமிகளும் தாம் திருவாய்மலர்ந்தருளிய திருவாசகத்தில் கூறியிருக்கின்றார். அவையரு மாறு:—

"கூவினபூங்குயில் கூவினகோழி
குருகுகளியம்பினசங்கம்
ஓவினதாரகைஒளியொளிஉதயத்து
ஒருப்படுகின்றதுவிருப்பொடுநமக்குத்
தேவநற்செறிகழல்தாளிணைகாட்டாய்
திருப்பெருந்துறையுறைசிவபெருமானே"

ஆகையால் நேரத்தோடு நித்திரைசெய்து நேரத்தோடு எழும்பவேண்டுவதே ஆயுள்வேத முறை

ச. பொன்னுஸ்வாமிக்குருக்கள்,
அம்மன்கோயில், சுதுமலை.

## அன்புநெறி
### அல்லது
## "பிரேம சமாஜம்."

'அன்பு சிவம்.'

அன்புருவமானவரும், அகிம்சா பரிபாலன ரும், அகிலலோகத்தாராலும் அதியுயர்ந்த பெரியாரெனப் போற்றப்படுபவருமான 'மகாத்மா காந்தியடிகள்' கருணைகூர்ந்து யாழ்ப்பாணத் துக்கு விஜயஞ்செய்த பெருந்தகைமைக்கறிகுறியாக இ'நெறி' நிறுவப்பெற்றது. இதன் நோக்கம் அனைவரிடத்துங் கைம்மாறுவேண்டா அன்பையும் சேவையையும் அதிகப்படுத்தி அதன் காரணமான ஆனந்தத்தை அநுபவிக்கச் செய்தலே. இ'நெறி'யோ எம்மதத்தாரும் எப்பாலாரும் சம்மதமெனக் கொண்டாடத்தக்க சமரசம் வாய்ந்தது. எவ்வித சமயானுஷ்டானமுடையோரும் சங்கடமின்றிச் சார்ந்தநுஷ்டிக்கத்தக்கது. ஆஸ்திகன் முதல் நாஸ்திகனவரை அனைவரும் அன்பையும் சேவையையும் அவாவி நிற்பாரன்றோ? அன்பு இதுவென்று விவரிக்க முடியாதவர்களுங்கூட அதனை— அறிந்தோ, அறியாமலோ—அனைத்திலும் அனவரதமும் அப்பியசிக்கின்றனர். ஏனெனில் பிறந்த நேரந்தொட்டு இறக்குமளவும் நாம் அன்பை இடையறாதின்றி அப்பியசித்தும் அநுபவித்தும் வருகின்றோம். பொன்னையோ, பொருளையோ, பெண்ணையோ, மண்ணையோ, தனயனையோ, தாரத்தையோ, தேவனையோ, நேசனையோ, நாம் சதா நேசித்துக்கொண்டிருக்கிறோம். எதுவோ ஒன்றை நேசியாது கண்ணளவு நேரமும் இருக்க முடியாது. எந்த நிமிஷம் அன்புப் பெருக்குத் தடைப் படுகின்றதோ அந்த நிமிஷமே நாம் பிணமாய் விழுந்துவிடுவோம். தீப வெளிச்சத்திற்கு வாயு எப்படி வேண்டியிருக்கிறதோ, அப்படியே ஜீவவெளிச்சத்திற்கும் அன்பு ஆவசியகம் வேண்டியிருக்கின்றது. இன்றுயின், நாம் இறந்து படுதல் நிச்சயம்; எத்தனை இடம், பொருள், ஏவல் இருப்பினுஞ்சரியே! இவ் அநேசருக்கு சூதனமாகத் தோற்றலாம், ஆனால் சற்றே ஆழ்ந்தமைந்து யோசித்தால் உண்மை விளங்கும் ஆஸ்திகர் கொள்கைப்படி இப்பிரபஞ்சத்தையும் இதைச்சேர்ந்த சகலசராசரங்களையும் படைத்துக் காத்து அழிப்பது பகவானே. நாமும் பிரபஞ்சத்தின் ஒருபகுதியாதலால் நம்மைப் படைத்துக் காத்து அழிப்பவரும் அப்பகவானேயாம். அநுபவத்திற் கண்டபடி உலகத்திலே 'காண்டலைய தங்களவரைக் கடவுளார் போல வேண்டலுஞ் சுற்றினர்' எத்தனையோபேர் தம்நேசர்க்கு உயிர்கொடுத்து வர்த்தகாலத்து அவர் பிரிவாற்றாது தம்முயிரை விடுத்திருக்கின்றனர்! எத்தனையோ தாய்மார் தங்கள் தனயர்களுக்குப் பிராணாபத்துச் சம்பவித்தபோது தம்முயிரைத் திரணமாய் நினைத்திருக்கின்றனர்! இவையெல்லாம் எதனால்? அன்பு ஊற்றுத அவர்களிடம் ஓடத் தடைப்பட்டதினாலன்றோ? அன்புரசம் அவர்களினின்று பிரிக்கப்பட்டதனாலன்றோ? அன்பு தடைப்படவதினால்—பிரிக்கப்படுவதினால்—இவர்கள் உயிர் துறப்பார்களாயின் இந்த அன்பே இவர்கள் உச்சீவித்தற்குக் காரணமென்பது தெளிவிற் றுணியப்படும். ஆஸ்திகர் கொள்கைப்படி அனைத்தையும் படைத்துக் காத்து அழிப்பது ஆண்டவனே யென அறிந்தோம். அன்பும் ஆண்டவனும் புறம்பானால் இவர்கள் உயிர் பிரிவதெப்படி? கூடாது. இக்கருத்துப்பற்றியே 'அன்பு சிவம்' என்றும் 'ஆண்டவன் அன்பாயிருக்கிறார்' என்றும் ஆன்றோர் அறிவித்திருக்கிறார். அன்பும் ஆண்டவனும் வேறன்று. அவை மலரும் மணமும், மணியும் ஒளியும், நெருப்பும் சூடும் போல அத்துவிதமானவை, அபின்னமானவை. இத்தகைய பேரன்பை இனிது பரிபாலித்து, இனிய வழிகளிற் செலுத்தி, யாவரையும் பயனுறச் செய்தலே இ'நெறி' யைக்கொண்டானெறியாகும். இதன் கொள்கைகளை நன்கறிந்து 'எல்லாருமின்புற்றிருக்கநினைப்பதுவே' யாவர்க்கும் இன்றியமையாத கடனாகும்.

இவ்வித அன்பு இயக்கம் உலகத்தில் வேறொன்று மில்லை யெனலாம். இதிற் சேர்ந்துழைக்க யாவரும் முன்வருதல் வேண்டும். விடிந்தெழுந்தது தொடங்கிப் படுத்துறங்கும் வரை வீண் காரியங்களிலும், வீண் பொழுது போக்குகளிலும் ஈடுபட்டு, 'வந்த வரவை மறந்து', காமக்குரோதாதிகளிற் கட்டுண்டு காலத்தை யவமே கழிக்கும் நாம், சொற்ப காலமாவது ஆன்மதனமாகிய அன்பைப் பெருக்கி, இன்பைத் துய்க்க வேண்டுமென்றே இச் 'சமாஜம்' நிறுவப்பெற்றது. பேரையோ பொருளையோ பேணி நிற்பதின்று. இதன் பிரமாணங்கள் மிகச் சில; எளிதிற் பின்பற்றத் தக்கன; இதற்குக் கட்டண விதிகள் கிடையா. இதனை நிறுவியினார் கருத்து இனிது நிறைவேறற்பொருட்டும், அனைவரும் அன்பைப் பெருக்கி, இன்புறற் பொருட்டும் யாவரும் இச் 'சமாஜ'த்தின் அங்கத்தவர்களாகிக் காலை மாலைகளில்—அல்லது எழும்பும்பொழுதும், உறங்கும் பொழுதுமாவது—சிறிதுநேரம் மேல், கீழ் பக்கம் எங்குமுள்ள பொருட்களிடத்துப்—மனிதன், மிருகம், பறவை மச்சம், பூச்சி புட்பம், மரம், செடி, புல், பூண்டு, வானம், பூமி முதலிய சகல சடசித்துப் பிரபஞ்சத்தினிடத்தும்—அன்போடு கூடிய சந்தோஷகரமான எண்ணங்களைத் திரிகரணசுத்தியோடுஞ் செலுத்தி, அன்புத்தியானஞ் செய்து தாமுமின்புற்றுப் பிறரு மின்புறக் காணக் கடவர்.

1—12—28 கருணாநந்த.

## சத்தியாக்கிரகம்.

ஓர் சம்பாஷணை.
(முற்றொடர்.)

IV

கணபதியாரிரின் போக்கை அறிந்தவர்களும், கந்தையாவின் அநுதாபமில்லாமல் காரியம் ஒப்பேற்ற முடியாதென்று விளங்கினவர்களும் கந்தையாவிடம் வந்தார்கள்.

சேதுபதி ஒரு குலத்திற் பிறந்த சற்குணம், கடவுள்பயபக்தி, தானதருமசிந்தனை, மேலான அறிவுள்ள ஒரு உத்யோகக் கமக்காரன். எந்தக் குடும்புள்ளவர்களும், சேதுபதியின் நடைக்குப் பயந்து குனிவார்கள். சேதுபதியைக் கண்டால் தோளால் சால்வையெடாத பிரபு கிடையாது. எந்தச் சபைக்குப் போனாலும் சேதுபதிக்கு எழுந்து ஆசனமளித்துத்தான் மற்றவர்கள் பின் உட்கார்வார்கள். சேதுபதி தப்புத் தண்டாக்களில் தலையிடுவதே கிடையாது. ஒரு நாள் ஆறு பெண்பிள்ளைகளைப் பெற்ற மனிதன் சேதுபதியிடம் போய்த் தனது மனதை வெளிவிட்டு "நீங்கள் போனால் அந்தப்பையன் உடன்படுவான்" என்று சொன்னான். சேதுபதியிடம் வைத்தவன் எடுப்பதுபோலக் காரியங்களை விளங்கிக் காரியங்களை முன் அறிவிக்கும் ஆற்றல் உண்டு. சேதுபதிக்கு விவாகம் எப்போ நடக்குமென்பது நல்லாய்த் தெரியும். உதவி கேட்ட மனிதனுக்கு உதவி செய்ய வேண்டுமென்ற கொள்கையாலும், தன்னுடையகடமையென்ற விளக்கத்தாலும், மற்றவர்களைச் சாந்திப்படுத்த வேண்டி யிருப்பதாலும் ஒருநாள் விடியப்புறம் கந்தையாவிடம் போனார். "திலகவதி! திலகவதி!" என்று கூப்பிட்டுக்கொண்டு வீட்டுக்குப் போனார். திலகவதியார் தடிதடித்தெழுந்து "ஏன் அண்ணே! வெள்ளணப் பனிக்குள் வருவருகிறீர்கள்" என்று சொல்லிக்கொண்டு விளக்கை ஏற்றிச் சேதுபதியை வீட்டுக்குள் அழைத்து உட்காரவைத்துவிட்டு, "அண்ணே! மன்னித்துக்கொள்ளுங்கள்; கால்முகங்கழுவித் திருநீறு தரித்துக்கொண்டு வருகிறேன்" என்று சொல்லிவிட்டு மகனையுமெழுப்பினார். சேதுபதி "மைத்துனர்எங்கேபோய்விட்டார்" என்று வினவினார். 'அவர் சற்று முன்னமாய் இறைக்கப் போய்விட்டார்" என்று திலகவதியார் மறுமொழி சொன்னார். "கடுமையாய் வேலைசெய்யத்தான் வேண்டும்; ஆனால் உடம்பு தளர்ந்த நேரத்திலே வாலிபத்திலே ஆடிப் பாடினது போல உரமாய்ப் பணிசெய்யக்கூடாது. சொன்னால் மைத்துனர் கேட்டாலதானே" என்று சேதுபதி மனவருத்தப்பட்டார். கந்தையாவும் காலைக் கடன் களை முடித்துக்கொண்டுவந்து சேதுபதியை வணங்கினான். சேதுபதியும் கந்தையாவை வணங்கித் "தம்பீ! இப்படிக் கிட்டவாடா" என்று அழைத்து முதுகிலே தட்டி "இப்படி உட்காரு" என்றுசொன்னார். "இல்லை அப்பா! இப்படி உட்காருகிறேன்" என்று சொல்லித் தாக் கீழேஉட்கார்ந்தான். "தம்பீ! உனக்குத் தேவாரம் திருவாசகம் நல்லாய்ப் படிக்கத் தெரியும் என்று கேள்விப்பட்டேன்; சித்திர புத்திரனார் படியளக்கும் நேரம்; ஒரு திருத்தாண்டகம்படி பார்ப்போம்" என்றார். கந்தையா, "ஐயினன் மிடறடைப்புண்டு........" என்னும் திருத்தாண்டகத்தை அரிகாம்போதியிற் படித்து முடித்தான். கண்ணூறுபடாமல் இருக்கவேண்டும். 'சிவா! ஒரு திருப்பள்ளியெழுச்சி படி கேட்போம்' என்றார். 'போற்றியென்வாழ் முதலாகிய பொருளே.........' என்னும் பாட்டை நல்ல கோவில் பண்ணைப் படித்து முடித்தான். "தம்பி! உனக்கு இப்படிப் படிக்கத் தெரியுமாயிருந்தால் நான் ஒவ்வொரு விடியற்காலையும் இங்கே வருவேனே" என்று சொன்னார். "அப்பா! இரண்டொரு கீர்த்தனை வீணையுடன் படிக்கிறேன்" என்று சொல்லிக்கொண்டு எழுந்து வீணையுடன் வந்து உட்கார்ந்தான். "வீணையுமறிந்தத் தெரியுமா'? என்றார். "அதிகம் தெரியாது மலாய்நாட்டில் பழகின வித்தைதானே" என்று மறுமொழி சொல்லிவிட்டு நந்தன் கீர்த்தனையிலும் முத்துத்தாண்டவர் கீர்த்தனையிலும் இரண்டொரு கீர்த்தனை படித்து முடிப்பதற்கிடையில் திலகவதியார் வந்து குழப்பிப்போட்டார் "அண்ணே! இந்த அப்பத்தில் சுடச்சுடச் சொற்பமாய்ச் சாப்பிட்டுப் பாருங்கள்" என்று ஆசையுடன் சட்டுக்கொணர்ந்து முன்வைத்து தண்ணீர்ச் செம்பையும் நீட்டினார். "உண்மையாய்த் தம்பியின் இராகம் என் வயிற்றை நிரப்பிப்போட்டது; இனி எங்கே சாப்பிடுவதற்கு இடமிருக்கு" என்று மறுத்தார். திலகவதியார் சேதுபதியின் கையைப் பற்ற உடனே எழுந்து கை கால் கழுவித் திருநீறு தரித்துக் கும்பிட்டு விட்டு அப்பத்தைச் சாப்பிட்டார். அப்பத்தைச் சாப்பிட்டு முடியும் பருவத்தில், கந்தையா தோட்டத்தில் பறித்து வந்த நல்ல பெரிய மாதளம்பழத்தைத் தயார் செய்து வாழை இலையில் கொணர்ந்து முன்வைத்தான். இதென்ன தொல்லையாயிருக்கே என்று சேதுபதி பட்சமாச்சொன்னார். "அப்பா! கொஞ்சமாயாகுதல் சாப்பிடுங்கள்; இது நான் வைத்து வளர்த்த மாதுளையின் பழம்; நல்ல மதுரமான பழம்; இதின் விதையைப் பாருங்கள் கடுகுபோலச் சிறிதாயிருக்கு. இப்பழத்தில் முழுதும் ரசமே ஒழியக் கொட்டைகள் மிகக் குறைவு. இதின் நிறத்தைப் பாருங்கள்! இலங்கைச் சிவப்பும் இதற்கு நிகர் நில்லாது" என்று தனது மாதுளையின்பழத்தைப் புகழ்ந்து பேசினான். "தம்பி! நீ உனது மரத்திலே கொண்ட விருப்பத்தால் இப்படிச் சொல்லுகிறாயோ அல்லது விருந்தினனுகிய என்னை உண்பிப்பதற்காகச் சொல்லுகிறாயோ தெரியாது. என்னுடைய தோட்டத்திலே உள்ள மாதுளம்பழத்தை நீ சாப்பிட்டுப் பார்க்கவில்லை அப்படிச் சாப்பிட்டிருந்தால் நீ உன் பழத்தை மெச்சமாட்டாய். பழத்தின் ரசம் பயினாயிலும் அதிகம் தங்கியிருக்கு" என்று சொன்னார். இப்படிப் பேசிக்கொண்டு வைத்த மாதுளம பழத்தைச் சாப்பிடுவதற்கிடையில் திலகவதி பளபளத்த லோட்டாவில் மோர் கொணர்ந்து முன்வைத்து 'அண்ணே! இதைக் குடித்துப்பாருங்கள்' என்றுசொன்னாள். உணவுமுடிந்தபின்,

திலகவதியார்:—அண்ணே! இன்று நீங்கள் ஏன் இவ்வளவு வெள்ளென வந்தீர்கள்; எனக்குப் பெரும் அதிசயமாயிருக்கு.

சேதுபதி:—சொல்லவே எனக்கு வெட்கமாயிருக்கு; நீயே ஒரு கனியொன்றை வளர்த்து வைத்திருக்கிறாய்; உன்னுடைய அல்லது உனது மகனுடைய எண்ணத்துக்கு மாறாய்ப் போக எனக்கு மனமில்லை; அவன் நாகலிங்கன் ஆறு பெண்பிள்ளைகளைப் பெற்றுப்போட்டான். அவனுக்கு உதவி செய்யவேண்டியது எங்கள் கடமை; அவனிடம் போதிய சீதனம் கொடுப்பதற்கில்லை. நான் அவன் கொடுக்கும் 1000 ரூபாவுடன் இன்னும் 2000 ரூபாவை எனது பணமாய்ப் போட்டு மூத்த வள்ளிக்கு ஒரு செப்பமான இடத்தில் மணஞ் செய்துவைக்க வேண்டுமென்றல்லவா விரும்புகிறேன்.

திலகவதியார்:—என்னுடைய அபிப்பிராயமும் எனது மகனுடைய விருப்பமும் தானே உங்களுக்கு நல்லாய்த் தெரியும். பாருவதியை நான் சுயநலங்கருதி வளர்க்கவில்லை. அவள் விருப்பத்திற்கு நான் நடப்பதே அல்லாமல், என் விருப்பத்துக்கு அவள் படியவேண்டுமென்று, கடவுளே! என் சிந்தை என்னவும் விரும்பவேயில்லை. அவள் பிள்ளை இந்த விவாக மில்லாவிட்டால் நெடுகப் பிரமசாரினியாய் இருக்க உத்தேசித்து விட்டாள். அல்லது என் பிள்ளையை என்னோடு இணைப்பதற்குப் பதிலாய்ப் பிரிக்க என்மனம் உடன்படுமா? 'தாய்க்குப் பின் தாரம்' என்று சொல்லுவார்கள். என்னுடைய இடத்தை எடுத்து என் பிள்ளையையும் அவையும் சுமத்தையும் கட்டி ஆளக்கூடியவள் பாருவதிதான். அவளுடைய அறிவென்ன? குணமென்ன? நாகலிங்கனின் பிள்ளைகளோடு எனக்கு அநுதாபம்தான். நான் அவர்கள் வீட்டுக்குப் போனால் 'மாமி, மாமி' என்று அந்தப் பிள்ளைகள் தங்கள் உயிரையும் எனக்குக் கொடுத்துவிடுவார்கள். கடவுளே! கண்ணைக் கொடுத்தவனுக்குக் கோலைக் கொடுக்கத் தெரியாதா? என்னால் என்ன செய்ய இயலுமோ அதை நான் செய்து முடிப்பேன். நீங்கள் மூத்த பிள்ளைக்கு 2000 ரூபாவைக் கொடுத்தால் நேரே இளைய சிதம்பரத்துக்கு முழுச்சீதனமும் நான் கொடுக்கிறேன். இதை இரகசியமாய் வைத்திருங்கள் நாகலிங்க மிதை அறியக்கூடாது; நீங்கள் ஒரு சம்பந்தம் ஒழுங்காய் வரும்பொழுது தெரிவியுங்கள், நான் வாக்கை ஒப்பேற்றுகிறேன். அப்படித்தான் இந்தக் கட்டை போனாலும் தம்பி என் வாக்கை ஒப்பேற்றிவைப்பான்.

சேதுபதிக்கிருந்த சந்தோஷம், இவ்வளவென்று சொல்ல முடியாது. ஒருவகையான சித்திபுமில்லாது திரும்பிப் போவதுதான், என்று வந்தவருக்கு நாகலிங்கத்தின் இரண்டாம் மகளுக்கு ஒரு கஷ்ட நஷ்ட மில்லாது சீதனத்துக்கு வாக்குப் பெற்றது பெரும் சந்தோஷமான காரியந்தானே.

சேதுபதி:—தங்கச்சி! இந்தத் தரும விஷயத்தில் தலையிட்டு வாக்களித்ததற்காகச் சந்தோஷப்படுகிறேன். ஆயிரம் கோவிலை இடித்தும் ஒரு குமரைக் கரைசேர்ப்பது பெரும் புண்ணியம். நான் ஒருவருக்கும் உனது வாக்குறுதியைப்பற்றி வெளிவிடேன்; நீ அஞ்சாதே. நான் இவன் தம்பியுடன் பேசிவிட்டுப் போகிறேன், நீ போய் உன் மாட்டடியில் வேலையைப்பார்; உனக்கு இப்பொழுது அவள் பிள்ளையின் (பாருவதியின்) சகாய மில்லை என்பதை நினைத்து விசனப்படுகிறேன். (வரும்.)

மலாய்நாட்டுவாசி.

## அடைவுநகை விற்பனவு விளம்பரம்.

1893-ம் ஆண்டின் 8-ம் இலக்கச் சட்டநோச்சட்டத்தின்படி லைசென்ஸ் பெற்று அடைவு பிடிக்கும் யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை ஐக்கியலாபநிதியில் அடைவு வைக்கப்பட்டு இப்போது தவணை தப்பி மேற்படி சட்டத்தின் 12-ம் பிரிவின்படி பிரசித்த ஏலத்தில் விற்கப்படவேண்டிய நகைகளின் விபரம்:—

1927-ம் ஆடு 7-ம் மாசம்

| இல. | உ. | ரூ | அடைவுவைத்தவருடைய பெயர் ஊர் | அடைவின் விபரங்கள். |
|---|---|---|---|---|
| 8503 | 8 | 200 | S திருநாவுக்கரசு 1st Cross St. Jaffna | ஒரு நிரைப்பட்ட சிவப்புவைத்த பிலிக்காப்பு சோடி 1 |
| 8-ம் மாசம் | | | | |
| 8619 | 1 | 50 | V S. நாகலிங்கம் வண்கிழக்கு | இலிற் டிம்பிபதக்கமுள்பட சங்கிலிஅட்டியல்1 |
| 8646 | 6 | 30 | சின்னத்தம்பி நாகலிங்கம் கச்சேரியடி | பட்டச்சிவப்பு 1 வைத்த மோதிரம் 1, பட்டச்சிவப்பு 2, பச்சை 1, வைத்த தாயித்து 1 |
| 8694 | 18 | 10 | சின்னத்தம்பி நாகலிங்கம் கச்சேரியடி | சு. இ. இல்லாத குவளைக்கடுக்கன் சோ 1 |
| 8695 | 18 | 155 | சின்னத்தம்பி நாகலிங்கம் கச்சேரியடி | டிம்பியுள்பட செட்டிப்பூரானட்டியல் 1 |
| 9-ம் மாசம் | | | | |
| 8836 | 14 | 50 | கணபதி கந்தன் கோண்டாவில் | நால் அழுக்குள்பட உட்கழுத்துத் தாலிச்சறடு1, குசலைச்சிகப்புப் பதக்கம் உள்பட அட்டியல் சரை 1 இல்லாத கம்பி அட்டியல்1, அரும்பு மணிக்கோர்வை 1 |
| 10-ம் மாசம் | | | | |
| 8938 | 3 | 10 | சின்னத்தம்பி சங்கரப்பிள்ளை வெள்ளாத்தெரு வண்-மேற்கு | பொன் சரை 2 |
| 8968 | 8 | 375 | சுப்பையா சின்னத்துரை வண்-கிழக்கு | தலைக்கப்பு சோடி 1, குச்சைச்சிகப்பு முகப்புடன்பட ஒட்டியாணம் 1 |
| 9069 | 26 | 80 | சுப்பையா சின்னராசா வண்கிழக்கு | குச்சைச்சிகப்பு டிம்பிபதக்கமுள்ட செட்டிப்பூரானட்டியல் 1 |
| 9073 | 26 | 90 | சதாசிவ ஐயர் சோமசுந்தர ஐயர் கொளும்புத்துறை | தொங்கல் சங்கிலி 1 |
| 11-ம் மாசம் | | | | |
| 9134 | 7 | 30 | K. சின்னத்தம்பி கந்தையா சிவியாதெரு-மேற்கு | திருகுஇல்லாத முறச்சுக்குத்தி |
| 9138 | 7 | 11 | சதிரேசு பொன்னையா வண்-மேற்கு | தட்டாதெரு பாதிச்சரிசு1 அட்டியல்1 |
| 9167 | 14 | 500 | கனகசபை முத்துக்குமாரு புத்தூர் | அரைப்பவுன் 65 உள்பட மாலை 1 |
| 9168 | 14 | 100 | அப்பாக்குட்டி கந்தையா ஆனைக்கோட்டை | இங்கிலீஸ் கமலமுயிரக்கடுக்கன் சோ.1 |

விற்பனவு:—விபவ வருஷம் மார்கழி 15-ம் திகதிக்குச்சரியான (29-12-28) சனிக்கிழமை காலை 10 மணி அளவில் எடுபட்ட நகை பிறநீக்கலாக மிகுதி டிெ கடையில் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

(Mis- 1346.)

சி ஐயம்பிள்ளை உடையார்,
வெர்நீஸ்மேஸ்தர்.

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன், கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள்வாழ்க, நான்மறை யறனை னோங்க நற்றவம் வேள்வியல்க, மேன்மை கொள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்.

Printed & published by Pandit V. T. Sambandhan for and on behalf of the Proprietors, the Jaffna Saiva Paripalana Sabai, at their Press, the SaivaPrakasa Press, Vannarponnai.